இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 04.12.2025

# மக்கள் ‘விரோத’ இல்லம்!

தமிழ்நாட்டு மக்களை தேச விரோதிகள் என்பேன். தேசத் துரோகிகள் என்பேன். அவர்களுக்கு இந்திய நாட்டுப் பற்றே கிடையாது என்பேன். குறுகிய எண்ணம் கொண்டவர்கள் என்பேன். தமிழ்நாட்டைத் தவிர அவர்களுக்கு அக்கறை கிடையாது என்பேன்.

தமிழ்நாட்டு மக்கள் வட மாநிலத்து மக்களை அடிக்கிறார்கள் என்பேன். உதைக்கிறார்கள் என்பேன். பீகார் மக்கள் இங்கு நிம்மதியாக வாழ முடியாத வகையில் தமிழ்நாட்டு மக்கள் நடத்துகிறார்கள் என்பேன். வடமாநிலத் தொழிலாளர்கள் இங்கு வர மறுப்பதால் தான், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியும் இங்கு குறைந்து வருகிறது என்பதை நான் கண்டுபிடித்திருக்கிறேன்.

தமிழ்நாட்டு மக்கள், தமிழ் நீங்கலாக மற்ற மொழி பேசும் மொழிச் சிறுபான்மையினரை தொல்லைதருவார்கள் என்பேன். தமிழ்நாட்டில் மொழிச் சிறுபான்மையினர் அச்சத்தோடு வாழ்கிறார்கள் என்பேன். அவர்களது மொழியை வீட்டுக்கு வெளியே பேச பயப்படுகிறார்கள் என்பேன்.

அந்நிய சக்திகள் தமிழ்நாட்டுக்குள் ஊடுருவி விட்டார்கள் என்பேன். அந்நிய சக்திகளுக்கு தமிழ்நாட்டு மக்கள் இரையாகி விட்டார்கள் என்பேன்.

ஜெர்மன் நாசிக்களின் சிந்தனை தமிழ்நாட்டுக்குள் வந்துவிட்டது என்பேன். அதனால்தான் தமிழர்களைத் தவிர மற்றவர்களை இவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள் என்பேன்.

இவர்கள் ஆங்கிலத்துக்கு அடிமையாக இருக்கிறார்கள் என்பேன். அதனால் தான் இந்தியை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள் என்று நான் கண்டுபிடித்திருக்கிறேன்.

தமிழ்நாட்டுப் பள்ளி மாணவ,மாணவியருக்கு அறிவில்லை என்பேன். அடிப்படை அறிவைக் கூட புரிந்து கொள்ள முடியவில்லை என்பேன். ஆங்கிலம் தெரியவில்லை என்பேன். அடிப்படைக் கணிதம் தெரியவில்லை என்பேன்.

தமிழ்நாட்டுக் கல்லூரி மாணவ, மாணவியருக்கு அறிவில்லை என்பேன். ஆராய்ச்சித் திறன் இல்லை என்பேன். அவர்கள் நடத்துவது எதுவுமே ஆராய்ச்சி அல்ல என்பேன்.

தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் அனைத்தையும் ‘வேஸ்ட்’ என்பேன். எந்தப் பல்கலைக் கழகமும் முறையாக ஒழுங்காக செயல்படவில்லை என்பேன். இங்கு ஆராய்ச்சிகள் நடக்கவில்லை என்பேன்.

**தமிழ்நாட்டில் கோடிக்கணக்கான மக்களின் அடையாளமாக இருக்கின்ற தமிழ்நாடு சட்டமன்றத்தை மதிக்க மாட்டேன். இலட்சக்கணக்கான மக்கள் பிரதிநிதிகளால் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் சட்டத்தை, மசோதாக்களை மதிக்க மாட்டேன். ‘ஊறுகாய் பானை’யில் ஊறப்போடுவேன். ஊசிப் போனதும் ஜனாதிபதிக்கு அனுப்பி விடுவேன். அங்கே நாற்றமடிக்கட்டும் என்று விட்டுவிடுவேன்.**

**தமிழ்நாட்டுக்கு நன்மை தரும் மசோதாவோ, அரசியல் தீர்மானமோ அது எதைப் பற்றியும் எனக்கு கவலை இல்லை. தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும் எதையும் ஏற்றுக் கொள்ள மாட்டேன். அதேபோல், ‘ரம்மி’ நடத்துபவர்களுக்கு எதிரான சட்டத்தையும் ஏற்க மாட்டேன். ‘ரம்மி’யால் எத்தனை மக்கள் செத்தாலும் எனக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை.**

**தமிழ்நாட்டுக்கு தொழில் தொடங்க வராதீர்கள் என்பேன். இங்கு தொழில் தொடங்கினால் முன்னேற முடியாது என்பேன். தமிழ்நாட்டில் அமைதி இல்லை என்பேன். ‘கொலை நடக்கிறது, பாலியல் நடக்கிறது’ என்று பீதியைக் கிளப்புவேன். ‘பெண்கள் நடமாட முடியவில்லை’ என்பேன். ‘தலித் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை’ என்பேன்.**

மக்கள் மன்றமான சட்டமன்றத்தை மதிக்க மாட்டேன். அதன் நெறிமுறைகளை மதிக்க மாட்டேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் எழுதி அனுப்பிய உரையைப் படிக்க மாட்டேன். அதை நீக்குவேன். என் விருப்பப்படி சேர்ப்பேன். அதை யாரும் கேள்வி கேட்க முடியாது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்திய நாட்டின் தேசிய கீதம் ஒலிக்கும் போதே அதை மதிக்காமல் வெளியேறுவேன்.

ஈராயிரம் ஆண்டு பழமையான திருக்குறளையே திருத்தி எழுதுவேன். திருவள்ளுவருக்கே காவி உடை தைத்து மாட்டுவேன். திருக்குறளுக்கே தப்புத் தப்பாய் பொழிப்புரை சொல்வேன்.அருட்பெருஞ்சோதி வள்ளலாரையும் மடை மாற்றுவேன். மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கொண்டாடப்படும் அண்ணல் அம்பேத்கரையும், அறிவுலக மேதை காரல் மார்க்சையும் அவமானப்படுத்துவேன். தமிழ்நாட்டு மக்களால் மதிக்கப்படும் தலைவர்களை நான் மதிக்க மாட்டேன்.

பேச்சுரிமை என்ற பெயரால் அவர்கள் பேசுவதையும், எழுத்துரிமை என்ற பெயரால் எழுதுவதையும் நான் ஏற்க மாட்டேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி இங்கு இருப்பதே எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கை பெற்ற மாண்புமிகு முதலமைச்சரை மதிக்க மாட்டேன். அவர் கோரிக்கைகளை ஏற்க மாட்டேன்.

உச்சநீதிமன்றம் என் தலையில் கொட்டுவதைப் பற்றி கவலை இல்லை. அவர்கள் தீர்ப்புகள் என்னைக் கட்டுப்படுத்தாது.

‘தினந்தோறும் தமிழ்நாட்டை அவமானப்படுத்த வேண்டும்’ என்பதே என்னுடைய ஒரே இலக்கு. அதை ஜாலியாகச் செய்து வருகிறேன்.

மொத்தத்தில் கோடிக்கணக்கான மக்கள் வாழும் ‘தமிழ்நாடு’ என்ற பெயரே எனக்குப் பிடிக்கவில்லை. மதராசப்பட்டினம், சென்னப்பட்டினம் என்று பெயர் சூட்டினால் பொருத்தமாக இருக்கும். காதுக்கு இனிமையாக இருக்கும். தமிழ் என்ற பெயர் காதில் விழாமல் இருக்கும். இன்பத் தேள் கொட்டாமலாவது இருக்கும்.

இப்படி மக்களுக்காகவே வாழும் நான் குடியேறி இருக்கும் இடத்துக்கு ‘மக்கள் பவன்’ என்று பெயர் சூட்டிக் கொண்டேன். ‘லோக் பவன்’ என்று சொல்லும் போது புல்லரிக்கிறது. இன்பத் தேன் பாய்கிறது.

**மகாகவி பாரதியாரின் ‘...........’ என்ற வரிதான் இந்த இடத்துக்கு மிகமிகப் பொருத்தமானது!**

# தொடரட்டும் ஆசிரியர் அய்யாவின் தொண்டறம்!

சென்னை, நவ.4 –

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி.வீரமணி அவர்களின் 93–ஆவது பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் “தொடரட்டும் ஆசிரியர் அய்யாவின் தொண்டறம்” என்று வாழ்த்தி பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:–

**தமிழ் மக்கள் நலமே தமது நலமாய், சமூகநீதி காப்பதே தன் வாழ்க்கைக் கடமையாய்ச் செயல்படும் மூப்பினை வென்ற மூவாப் போராளி ஆசிரியர் கி.வீரமணி அய்யா அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**பெரியார் திடலும் அண்ணா அறிவாலயமும் இணைந்து விரட்ட வேண்டிய பல ஆபத்துகள் தமிழ்நாட்டைச் சுற்றி வட்டமடித்துக் கொண்டே இருக்கின்றன. பெரியாரியத் தடியும், பேரறிஞரின் மதியும், முத்தமிழறிஞரிடம் கற்ற உழைப்பும் கொண்டு ‘திராவிட மாடல்’ நல்லாட்சி நிலைக்கச் செய்வோம், ஆசிரியர் அய்யாவின் அறிவுரைகளோடு தமிழ்நாட்டைத் தொடர்ந்து காப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.12.2025) முகாம் அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.

## திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு மாவட்ட எல்லையான ஆரணியில் எழுச்சியான வரவேற்பு!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, டிச.4-

திருவண்ணாமலை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழா, அரசு நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும், கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, திருவண்ணாமலை மாவட்ட எல்லையான ஆரணியில் எழுச்சியான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

திராவிடத்தின் திரு விளக்கு, தமிழர்களின் ஒளி விளக்கு, எல்லோர்க்கும் எல்லாமும் என்று வளமான தமிழகத்தை வழிநடத்தும் திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு துணையாகவும், இளைஞர் அணியை சிறப்பாக வழி நடத்திடும், திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறையாம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தருகிறார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் இன்று (04.12.2025 - வியாழன்) மாலை 5.00 மணிக்கு, ஆரணி ஹவுசிங் போர்டு நான்குமுனை சந்திப்பில், நவீன தமிழகத்தை உருவாக்கிட்ட முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு



விழாவும், நாளை 5.12.2025 வெள்ளி அன்று காலை 9.00 மணிக்கு, திருக்கோவிலூர் சாலையில் உள்ள மு.க. ஸ்டாலின் பூங்காவினை திறந்து வைக்கிறார்.

அதனைத் தொடர்ந்து சாரோனில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட தேர்தல் பணிப்பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகிறார்.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தரும், கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இன்று ( 04.12.2025 வியாழன்) மாலை 4.00 மணியளவில் மாவட்ட எல்லையான ஆரணி - ஆற்காடு சாலையில் உள்ள சங்கீத வாடி ஊராட்சி, அப்பதாங்கலில் எழுச்சியான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

எல்லையில் அளிக்கப்படும் வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களும், கழக தோழர்களும் திரண்டு, எழுச்சியான வரவேற்பு அளித்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 1.12.2025 அன்று சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெங்கட்ரங்கம் தெரு மாநகராட்சி சமுதாயக் கூடத்தில் மீட்புப்பணியில் ஈடுபடுவதற்காக படகு உள்ளிட்ட மீட்பு பணி உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌசிக் உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் காவல்துறையினர் உடனிருந்தனர்.